# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093619

1. District : மாவட்டம் தூத்துக்குடி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 03/2021 Date: நாள் 21.04.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : --

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 20.04.2021 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் சுமார் 11.30 மணிக்கு Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.04.2021 Time : நேரம் 08.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.04.2021 Time : நேரம் 08.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூல்மாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 75 கி.மீ தென் மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ஜெ.முருகலிங்கம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் D.ஜெயக்குமார்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் (g) Address : முகவரி 1/20, கிழக்கு தெரு, துவர்க்குளம், கொம்பன்குளம் கிராமம், கலுங்குவிளை அஞ்சல்,தூத்துக்குடி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.சுல்தான், மண்டல துணை வட்டாட்சியர், சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகம், சாத்தான்குளம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr.R.AUTHEES Rank Inspr. to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J.Mhingam 21/04/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

21/04/2021

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21.04.2021 at 09.05 hrs

R.ஆதீஸ்,
Name: பெயர் காவல் ஆய்வாளர்
Rank: நிலை ஊ.த.(ம) க.தூ No. எண் .........
தூத்துக்குடி 21.04.2021.

**தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2021, பிரிவு 7(a) of PC Act. 1988 as Amended in 2018.**

**பணிந்து அனுப்பப்படுகிறது :-**

இன்று (21.04.2021)-ம் தேதி 08.00 மணிக்கு R.ஆதீஸ், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திரு.ஜெ.முருகலிங்கம் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை .வட்டாட்சியராக பணிபுரிந்து வரும் திரு.சுல்தான் என்பவர் புகார்தாரரின் தூரத்து உறவினரும் பாட்டியுமான திருமதி.பூங்கனி என்பவரது கணவர் (இறப்பு) திரு.அருணாசலம் நாடார் பெயரில் உள்ள சாத்தான்குளம் கிராமம் புல எண்.206/15, 206/16 மற்றும் 283/26 ஆகியவை உள்ளடக்கிய பட்டா எண்.854-ன்படி 1.75.49 ஹெக்டேர் (4.5 ஏக்கர்) இடத்தினை அவர்களது வாரிசுதாரர்களான மனைவி திருமதி.பூங்கனி, மகள் திருமதி.ஜெயராஜகனி, திருமதி.ஜெஸிகலா மற்றும் மகன் திரு.முத்துலிங்கம் ஆகியோர் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.2000/- லஞ்சமாக கேட்பதால் நடவடிக்கை எடுக்க தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பற்றி இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சாத்தான்குளம் வட்டாட்சியர் அலுவலக மண்டல துணை வட்டாட்சியர் திரு.சுல்தான் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம், சென்னை மூலமாக இயக்குநர் அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்தும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 03/2021 பிரிவு 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 படி 21.04.2021-ம் தேதி 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: ஜெ.முருகலிங்கம், வயது 22, த/பெ.தே.ஜெயக்குமார், 1/20, கிழக்கு தெரு, துவர்க்குளம், கொம்பன்குளம் கிராமம், கலுங்குவிளை அஞ்சல், சாத்தான்குளம்

வட்டம், தூத்துக்குடி மாவட்டம் - 628 704. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரியில் இளங்கலை சட்டம் நான்காம் ஆண்டு படித்து வருகிறேன். எனது பக்கத்து வீட்டில் எனது உறவினரும் பாட்டி முறையுமான திருமதி.பூங்கனி அவர்கள் வசித்து வருகிறார். அவரின் கணவர் திரு.அருணாசலம் நாடார் கடந்த 19.06.2013-ல் இறந்துவிட்டார். திரு.அருணாசலம் நாடார் பெயரில் எங்கள் ஊரில் புல எண்.206/15, 206/16 மற்றும் 283/26 ஆகியவை உள்ளடக்கிய பட்டா எண்.854-ன்படி 1.75.49 ஹெக்டர் (4.5 ஏக்கர்) இடம் உள்ளது. திரு.அருணாசலம் நாடாருக்கு அவருடைய மனைவி திருமதி.பூங்கனி, மகள்கள் திருமதி.ஜெயராஜகனி, திருமதி.ஜெஸிகலா மற்றும் மகன் திரு.முத்துலிங்கம் ஆகிய நான்கு பேர் வாரிசுகளாக உள்ளனர். எனவே மேற்படி இடத்தில் உள்ள அவர் கணவர் திரு.அருணாசல நாடார் அவர்கள் பெயரை நீக்கம் செய்து அவர்களின் வாரிசுகளான நான்கு பேர் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு கடந்த 03.03.2021 அன்று சாததான்குளம் தாலுகா அலுவலக வளாகத்தில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்திருந்தார். தற்போது அவரது மகன் மற்றும் மகள்கள் இருவரும் சென்னையில் வசித்து வருவதால் அவரால் மேற்படி பட்டா பெயர்மாற்ற விண்ணப்பம் சம்பந்தமாக அலைந்து பார்க்க முடியவில்லை. எனவே நேற்று (20.04.2021) என்னிடம் அந்த விபரங்களை கூறி ஏற்கனவே மேற்படி பட்டா பெயர் மாற்றம் தொடர்பாக ஆன்லைனில் விண்ணப்பித்து உள்ளதாகவும் அது தொடர்பாக கிராம நிர்வாக அலுவலரிடம் கடந்த 15.04.2021-ல் பரிந்துரை பெற்றுள்ளதாகவும் அந்த மனுவை உள்ளடக்கிய ஆவணங்கள் மற்றும் இணைப்புகளையும் என்னிடம் தந்தும், அவர் சார்பாக நான் சாத்தான்குளம் தாலுகா அலுவலகம் மற்றும் அலுவலகங்களுக்கும் சென்று அனுகுவதற்கும் ஒரு சுய உறுதிமொழி பத்திரமும் என்னிடம் கொடுத்து பட்டாவில் பெயர் சேர்ப்பது சம்பந்தமாக உள்ள அதிகாரிகளை பார்த்து வர சொன்னார். நானும் அவர் வீட்டிற்கு அருகில் வசித்து வருவதாலும் அவர் வயதானவர் என்பதாலும் நான் அடிக்கடி சாத்தான்குளம் சென்று வருவதாலும் அவற்றை பெற்று நேற்று 20.04.2021 காலை சுமார் 11.30 மணியளவில் சாத்தான்குளம் தாலுகா அலுவலகம் சென்று அங்கு இருந்த மண்டல துணை வட்டாட்சியர் திரு.சுல்தான் அவர்களைப் பார்த்து மேற்படி பட்டாவில் பெயர் சேர்த்தல் மற்றும்

மாற்றம் தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் VAO விடம் கையெழுத்து பெற்று வந்துள்ளாயா என்று கேட்டார். அதற்கு நானும் ஆமாம் என்று கூறினேன். அதை வாங்கி பார்த்தார். இதனை நான் ஆன்லைனில் செய்ய வேண்டும் இம்மனுவில் உள்ள பட்டாவில் பெயர்களை சேர்ப்பதற்கும், நீக்குவதற்கும் உள்ள அரசு பணியை செய்ய ரூ.2,000/- லஞ்சமாக வேண்டும் என்றார். நான் அதற்கு அவர் வயதானவர் மேலும் அவருடைய பிள்ளைகள் சென்னையில் உள்ளார்கள் எனக்கு அவர் உறவினர் என்பதால் நான் வந்துள்ளேன் என்றும் அதனால் சற்று குறைத்து சொல்லுங்கள் என்றேன். அதற்கு அவர் என்னிடம் ரூ.2,000/- கொடுத்தால்தான் பட்டாவில் பெயர்களை சேர்க்கவும், இறந்தவரின் பெயரினை நீக்கவும் செய்ய இயலும் என்றும் நாளை பணத்துடன் வா என்றும் சொல்லிவிட்டார். நானும் அவரிடம் வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் வீட்டிற்கு வந்து யோசனை செய்ததில் பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏன் அவருக்கு லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டும் என்று தோன்றியது. மேலும் இது தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என்று எண்ணி மேற்படி விபரத்தை பூங்கனி பாட்டியிடம் கூறினேன். அவரும் சரி நீயே எல்லாவற்றையும் பார்த்துக்கொள் என்று என்னிடம் சொல்லிவிட்டார். எனவே இன்று 21.04.2021 காலை மண்டல துணை வட்டாட்சியர் லஞ்சமாக என்னிடம் கேட்ட பணம் ரூ.2,000/-ஐயும் மற்றும் பூங்கனி பாட்டி எனக்கு கொடுத்த சுய உறுதிமொழி பத்திரம் மற்றும் ஆவண நகல்களை எடுத்துக்கொண்டு தூத்துக்குடியில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்திற்கு வந்து தங்களிடம் ஆஜர் செய்கிறேன். என்னிடம் ரூ.2,000/- லஞ்சம் கேட்ட சாத்தான்குளம் மண்டல துணை வட்டாட்சியர் திரு.சுல்தான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு வழங்குகிறேன். இப்படிக்கு XXXXXXX s/d., by ஜெ.முருகலிங்கம், நாள் : 21.04.2021.

இன்று 21.04.2021ம் தேதி காலை 08.00 மணிக்கு இம்மனுவை பெற்று, மனுதாரர், எதிர்மனுதாரர் பற்றி ரகசிய விசாரணை செய்தும், கனம் இயக்குனரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னையில் போனில் தகவல் தெரிவித்தும், இம்மனுவின் தன்மைப்படி 21.04.2021-ம் தேதி 08.30 மணிக்கு தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 03/2021,

u/s. 7 (a) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 படி வழக்கு பதிவு செய்து, விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். xxxxxxx s/d., by இரா.ஆதிஸ், காவல் ஆய்வாளர் 21.04.2021. அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

21/4/(21). காவல் ஆய்வாளர்,